# DAILY CURRENT AFFAIRS APRIL O9

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
|---|---|---|
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | Group I- 06.09.2026<br>மீதம் 149 நாட்கள்<br><br>Group II & IIA- 25.10.2026<br>மீதம் 198 நாட்கள்<br><br>Group IV- 20.12.2026<br>மீதம் 255 நாட்கள் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |



## 1. TODAY NEWS ARTICLES

# அமெரிக்கா- ஈரான் இரு வார போர் நிறுத்தம்

## இந்தியா வரவேற்பு

**புது தில்லி, ஏப். 8:** ஈரான், அமெரிக்கா–இஸ்ரேல் இடையே இரு வார காலத்துக்கு போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதை இந்தியா வரவேற்றுள்ளது.

இது குறித்து தில்லியில் உள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதை இந்தியா வரவேற்கிறது. இதனால் மேற்காசியாவில் நீடித்த அமைதி ஏற்படும் என நம்புகிறோம். மோதலால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். உலக எரிபொருள் விநியோகமும், வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. ஹோர்முஸ் நீரிணையில் தங்கு தடையின்றி சுதந்திரமாக கப்பல் போக்குவரத்தும், உலகளாவிய கச்சா எண்ணெய் வர்த்தகமும் நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுவை, கேரளம், அஸ்ஸாமில் இன்று வாக்குப் பதிவு

**புதுச்சேரி/திருவனந்தபுரம்/குவாஹாட்டி, ஏப். 8:** கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் வியாழக்கிழமை (ஏப். 9) ஒரே கட்டமாக பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இதையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

... சன் (பரவூர்), மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் (நேமம்) உள்ளிட்டோர் முக்கிய வேட்பாளர்களாவர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வரும் முனைப்பிலும், காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அதிகாரத்தைக்

## வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ஆர்பிஐ

**மும்பை, ஏப். 8:** வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி (ரெப்போ ரேட்) விகிதம் மாற்றமில்லாமல் 5.25 சதவீதமாக தொடரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) புதன்கிழமை அறிவித்தது.

மும்பையில் ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் கடந்த 3 நாள்களாக நடைபெற்ற ஆர்பிஐ நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் 6 பேர் அடங்கிய குழு ஒருமனதாக இந்த முடிவை எடுத்தது.

# தமிழகத்தில் முதல்முறை வாக்காளர்கள் 34% உயர்வு

**சென்னை, ஏப். 8:** தமிழகத்தில் முதல் முறையாக வாக்களிக்கும் இளம் வாக்காளர்களின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

18-19 வயது உடைய வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த 2024 மக்களவைத் தேர்தலின் போது 10.9 லட்சமாக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 14.6 லட்சமாக உயர்ந்துள்ளது.

# கோடிக்கணக்கானோரின் வாழ்க்கையை மேம்படுத்திய 'முத்ரா கடன்' திட்டம்

## பிரதமர் மோடி பெருமிதம்

**புது தில்லி, ஏப். 8:** முத்ரா கடன் திட்டம் கோடிக்கணக்கானோரின் வாழ்க்கையை மேம்படுத்தியுள்ளது; நாடு முழுவதும் தொழில்முனைவோருக்கு பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்தது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



சிறிய அளவில் வர்த்தகம், உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் இருப்போருக்கு அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரை கடன் வழங்குவது முத்ரா திட்டமாகும். இதில் சிறிய காய்கறி வியாபாரிகள், இயந்திர பழுதுபார்ப்பு கடை நடத்துவோர், கைவினைத் தொழில் புரிவோர் உள்பட பலதரப்பட்ட சிறிய அளவில் தொழில்களை மேற்கொள்பவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

மத்திய பாஜக அரசின் முக்கியத் திட்டங்களில் ஒன்றான முத்ரா திட்டம் தொடங்கப்பட்டு புதன்கிழமையுடன் (ஏப்.8) 11 ஆண்டுகள் நிறைவடைந்தது. இதை முன்னிட்டு பிரதமர் மோடி 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'இத்திட்டம் சிறிய அளவில் தொழில்

## TYPES OF LOANS

| Shishu | Kishor | Tarun | Tarun plus |
|---|---|---|---|
| Loans up to Rs. 50,000. | Loans above Rs. 50,000 and up to 5 Lakh. | Loans above Rs. 5 lahks and up to 10 lahks. | Loans from ₹10 lakh to ₹20 lakh for Tarun category with successful past repayment. |

**Collateral-Free** loans up to Rs **20 lakh** are provided by **Member Lending Institutions (MLIs).**

MLIs include Scheduled Commercial Banks (SCBs), Regional Rural Banks (RRBs), Non-Banking Finan cial Companies (NBFCs) and Micro Finance Institutions (MFIs).



சென்னை மாவட்டத் தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் புதன்கிழமை ரிப்பன் மாளிகையில், 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டிலேயே வாக்களிப்பது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக நடைபெற்ற பயிற்சி வகுப்பில் பங்கேற்ற வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் நுண்பார்வையாளர்கள்.







**<u>தீனதயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்</u>** (DAY-NRLM) என்பது ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் ஒரு முதன்மைத் திட்டமாகும். இது பெண்களை சுய உதவிக் குழுக்களாக (SHG) அணிதிரட்டுவதன் மூலம் கிராமப்புற வறுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிதி உள்ளடக்கல், திறன் பயிற்சி மற்றும் வங்கிக் கடன் வசதி ஆகியவற்றின் மூலம் நிலையான வாழ்வாதாரங்களைச் சாத்தியமாக்குகிறது. இத்திட்டம் குறுந்தொழில்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமும், வருமான ஆதாரங்களைப் பன்முகப்படுத்துவதன் மூலமும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மாற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது.









**<u>இந்தியாவின் தோரியம் அணு:</u>**

**<u>நோக்கம்:</u>**

இந்தியாவின் 3-கட்ட அணு திட்டம், அதன் மிகுந்த தோரியம் வளங்களை நிலையான ஆற்றல் மூலமாக மாற்றி, நீண்டகால ஆற்றல் தன்னிறைவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**<u>கட்டம் 1: அழுத்தம் கொண்ட கனநீர் அணு உலைகள் (PHWRs)</u>**

யுரேனியம் எரிபொருளைப் பயன்படுத்துதல் (உதாரணம்: ராஜஸ்தான்)

- **1948** – டாக்டர் ஹோமி ஜே. பாபா தன்னிறைவு அணு திட்டத்திற்கான பார்வை முன்வைத்தார்
- **1954** – அணு ஆற்றல் துறை நிறுவப்பட்டது
- **1960–80கள்** – பல PHWR உலைகள் கட்டப்பட்டு புளுடோனியம் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது

**<u>கட்டம் 2: மாதிரி வேக இனப்பெருக்க அணு உலை (PFBR)</u>**

புளுடோனியம் எரிபொருளாக பயன்படுத்தி யுரேனியம்-233 உருவாக்குதல்

- **1985** – இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் FBR ஆராய்ச்சியை தொடங்கியது
- **2004** – கல்பாக்கத்தில் PFBR கட்டுமானம் தொடங்கப்பட்டது

- **2026** – முக்கிய நிலையை (Criticality) அடைந்து செயல்பாடு தொடக்கம்

**<u>கட்டம் 3: தோரியம் மின்சார அணு உலைகள்</u>**

யுரேனியம்-233 மூலம் தோரியம் வளங்களை பயன்படுத்துதல்

- **2026** – மேம்பட்ட கனநீர் மற்றும் உருகிய உப்பு அணு உலைகள் உருவாக்கம்
- **2026** – தோரியத்தை பயன்படுத்தி யுரேனியம்-233 எரிபொருள் சுழற்சி உருவாக்கம்
- **2030→** – இந்தியாவின் பெரும் தோரியம் வளங்களை பயன்படுத்தத் தொடங்குதல்

➡ உலகின் மிகப்பெரிய தோரியம் வளங்களை பயன்படுத்தி ஆற்றல் பாதுகாப்பை உறுதி செய்தல்

## 2. National News







PRE-NOTA PROVISION
(Section 49-O)
Before NOTA was introduced, voters had the option under 49-O to REFUSE TO VOTE while still marking their presence.
Key Point:
Voter could register their decision NOT TO VOTE for any candidate
Identity was recorded (No secrecy like NOTA)
Difference Today:
49-O
Not Secret
NOTA
Secret Ballot Option
NOTA


Argentina formally withdrew from the World Health Organization in March 2026, following the United States exit earlier.


Khelo India Tribal Games 2026 to be held in Chhattisgarh from March 25–April 3 with 6,000+ participants across multiple sports; mascot: Morveer.


THANTHI TV
இஸ்ரோவின் மெகா பிளான்..!
நிலவில் மனிதனை இறக்கும் வரலாற்றுச் சாதனைக்கான கால அட்டவணையை வெளியிட்ட ISRO..
இதன்படி, 2027-ல் நிலவிலிருந்து மண் மாதிரிகளை எடுத்துவர "சந்திரயான்-4" விண்கலம் ஏவப்படும்..
தொடர்ந்து 2028-ல் "சுக்ராயன்" மூலம் வெள்ளி கிரகத்தை ஆய்வு செய்யவும், அதே ஆண்டில் பாரதிய அந்தரிக்ஷ் விண்வெளி நிலையத்தின் முதல் பகுதியை அமைக்கவும் திட்டம்..
அடுத்த தலைமுறை ஏவுகணையான NGLV-யை 2031-ல் அறிமுகப்படுத்தி, இறுதியாக 2040-ஆம் ஆண்டுக்குள் நிலவில் இந்திய வீரர்களைத் தடம் பதிக்க வைக்க இஸ்ரோ தீவிரம்..




## 3. PYQ CA Questions

கீழ்வருவனவற்றுள் எவை தமிழ்நாடு பாதுகாப்பான மற்றும் நெறிமுறை செயற்கை நுண்ணறிவுக் கொள்கை, 2020 இன் நோக்கங்கள் ஆகும்?

(i) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கு முன்னர் செயற்கை நுண்ணறிவு முறைகளைத் திறனாய்வு செய்யும் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும்

(ii) வெளிப்படையான தரவுகள், தரவு மாதிரிகள் மற்றும் இணையவழி ஆதாரங்களுக்கு வரையறுக்கப்பட்ட அனுமதியை வழங்குதல்

(iii) தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான முதலீடுகளை ஈர்த்தல்

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

Which of the following are the objectives of Tamilnadu safe and Ethical Artificial Intelligence Policy, 2020?

(i) To establish guidelines for the evaluation of AI systems before its rolled out for public use

(ii) To provide restricted access to open data, data models and computing resources

(iii) To promote investments in AIR & D in Tamilnadu

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only

## 4. PRACTICAL MCQ'S

| | |
|---|---|
| 1. Under which programme is the Namo Drone Didi Yojana (NDDY) being implemented?<br><br>A. National Rural Health Mission<br><br>B. Deendayal Antyodaya Yojana–National Rural Livelihoods Mission<br><br>C. Pradhan Mantri Gram Sadak Yojana<br><br>D. Mahatma Gandhi National Rural Employment Guarantee Act | 1. நமோ ட்ரோன் திதி யோஜனா (NDDY) எந்தத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது?<br>A. தேசிய ஊரக சுகாதார இயக்கம்<br>B. தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்<br>C. பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா<br>D. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் |
| 2. Which High Court has imposed a complete ban on the use of Artificial Intelligence (AI) in judicial judgments and judgment drafting?<br><br>A. High Court of Bombay | 2. நீதித்துறைத் தீர்ப்புகள் மற்றும் தீர்ப்பு வரைவுகளில் செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்துவதற்கு எந்த உயர் நீதிமன்றம் முழுமையான தடை விதித்துள்ளது?<br>A. பம்பாய் உயர் நீதிமன்றம் |

| | |
|---|---|
| B. High Court of Delhi<br><br>C. High Court of Gujarat<br><br>D. High Court of Madras | B. டெல்லி உயர் நீதிமன்றம்<br>C. குஜராத் உயர் நீதிமன்றம்<br>D. மெட்ராஸ் உயர் நீதிமன்றம் |
| 3. Consider the following statements regarding India's Prototype Fast Breeder Reactor (PFBR):<br><br>1. It is located at Kalpakkam in Tamil Nadu.<br><br>2. It has achieved criticality successfully.<br><br>3. It is a 500-Megawatt capacity reactor.<br><br>Which of the statements given above is/are correct?<br>A. 1 and 3 only<br>B. 2 and 3 only<br>C. 1 and 2 only<br>D. All 1, 2, and 3 | 3. இந்தியாவின் முன்மாதிரி வேக இனப்பெருக்க அணு உலை (PFBR) தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:<br><br>1. இது தமிழ்நாட்டில் உள்ள கல்பாக்கத்தில் அமைந்துள்ளது.<br>2. இது வெற்றிகரமாக நிலைமாறுநிலையை அடைந்துள்ளது.<br>3. இது 500 மெகாவாட் கொள்ளளவு கொண்ட அணு உலை ஆகும்.<br><br>மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரியானவை?<br>A. 1 மற்றும் 3 மட்டும்<br>B. 2 மற்றும் 3 மட்டும்<br>C. 1 மற்றும் 2 மட்டும்<br>D. 1, 2, மற்றும் 3 அனைத்தும் |
| 4. Consider the following statements regarding the UN Security Council resolution on the Strait of Hormuz reopening:<br><br>1. Russia and China vetoed the resolution.<br><br>2. One f ifth of the world's oil passes through the Strait of Hormuz.<br><br>3. The resolution was proposed under the leadership of Bahrain.<br><br>Which of the statements given above is/are correct?<br>A. 1 and 3 only C. 1 and 2 only<br><br>B. 2 and 3 only D. All 1, 2, and 3 | 4. ஹோர்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது குறித்த ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானம் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:<br><br>1. ரஷ்யாவும் சீனாவும் தீர்மானத்தை வீட்டோ செய்தன.<br>2. உலகின் எண்ணெயில் ஐந்தில் ஒரு பங்கு ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்கிறது.<br>3. பஹ்ரைனின் தலைமையில் இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டது.<br><br>மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரியானவை?<br>A. 1 மற்றும் 3 மட்டும்<br>B. 2 மற்றும் 3 மட்டும்<br>C. 1 மற்றும் 2 மட்டும்<br>D. 1, 2, மற்றும் 3 அனைத்தும் |

# 5.REVISION

Re-Edition – மறு பதிப்பு

Reel – சுருள்

Register – பதிவேடு

Register Marks – பதிவுக் குறிகள்

Register of Valuables – மதிப்புமிகு பொருட்பதிவேடு

Reglet – மரச்சக்கை

Reinforced End Paper – துணி ஒட்டி வலுப்பெறச் செய்த முடிவுத் தாள்

Relief Printing – மேற்பரப்பு அச்சு முறை

Remade-Up – மறு ஒப்பனை

Reprint – மறு அச்சு

| புவிசார் குறியீட்டு பொருட்கள் | இடம் |
|---|---|
| வெற்றிலை | கும்பகோணம் |
| மாணிக்கமாலை | தோவாளை |
| பலாப்பழம், முந்திரி | பண்ருட்டி |
| எலுமிச்சைப்பழம் | புளியங்குடி |
| சம்பா வத்தல் | விருதுநகர் |
| சின்ன வெங்காயம் | செட்டிகுளம் |
| சித்திரைக்கார் அரிசி | இராமநாதபுரம் |

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியில் ஒரு தங்க மணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்திற்கு (79) அடுத்தபடியாக, தமிழ்நாடு இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான புவிசார் குறியீட்டு பொருட்களை (69) கொண்டுள்ளது.

சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு சிற்பிகள் மற்றும் கைவினைஞர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கைவினை வளர்ச்சித் திட்டமான 'கலைஞர் கைவினைத் தொழில்' (Kalaignar Kaivinai Thittam) திட்டத்தை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.

மதுரை மேலூர் அருகே மேலவளவில் உள்ள சோமகிரி மலைகளில் இராஜராஜ சோழன் கால கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது..

எச்.ஐ.வி-யால் பாதித்த குழந்தைகளுக்கு மாதாந்திர நிதியுதவியாக ரூ.1000 வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

ஊட்டியின் முதல் பல்நோக்கு மருத்துவக் கல்லூரி நீலகிரியில் திறக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் பாம்பன் ரயில் பாலத்தைத் திறந்து வைத்தார், இது பிரதான நிலப்பகுதியை ராமேஸ்வரத்துடன் இணைக்கிறது. இந்தப் பாலம் நாட்டின் முதல் செங்குத்து தூக்கு இரயில் பாலமாகும்.

நீலகிரியில் ₹10 கோடி செலவில் "பழங்குடியினர் அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மையம்" கட்டப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்.